**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 294/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-13/PW-7 |
| Name | : தன்ராஜ் |
| Father/Husband's Name | : சந்திரபாபு |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.06.2025.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மாகரல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2015 ஆம் ஆண்டு மறைமலைநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது என்னுடன் பணி செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. காமராஜ் என்பவருடைய கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதனாலும், எனக்காகவும் , அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.09.2015 ஆம் தேதி காலை 10 மணியளவில் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 828/2015 இ.த.ச.பிரிவுகள் 279,304(A) முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது(எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் வழக்கின் கோப்புகளை நான் பெற்று முதல் விசாரணையை மேற்கொண்டேன். பின்னர் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீனிவாசன், கோவிந்தசாமி ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அவைகள் முறையே அ.த.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் 8 மற்றும் 9 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், இவ்வழக்கில் இறந்த நபரின் பிரேதம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்ததை, பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் 5,6,7 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் என்பவரின் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும்பொருட்டு உடற்கூராய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்தினை தலைமை காவலர் இருதயராஜ் என்பவரிடம் கொடுத்தனுப்பினேன். பின்னர், இவ்வழக்கில் உடற்கூராய்வு செய்து, அறிக்கை அளித்த அரசு மருத்துவர் பராசக்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அளித்த உடற்கூராய்வு அறிக்கை பெற்றேன். பின்னர், வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை உண்மை நகலில் 26.09.2015 ஆம் தேதி காலை 10 மணிக்கு புகார் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ. 4 உண்மை நகல் என்று உதவி ஆய்வாளர் காமராஜ் உண்மை நகல் என்று கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். 26.09.2015 ஆம் தேதி சாட்சிகள் ராஜா, ராஜ கண்ணன், வினோத் ஆகியோர்களின் வாக்குமூலத்தை எழுத்துமூலமாக எழுதி பதிவு செய்தேன் என்றால் சரிதான். சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்களின் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் தேதி குறிப்பிடவில்லை என்றால் இல்லை.

நான் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி ராமலிங்கம் விசாரணையில் போலீசார் விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு. காவல் உதவி ஆய்வாளர் விசாரிக்கவேண்டிய குற்றம் மற்றும் காவல் ஆய்வாளர் விசாரிக்கவேண்டிய குற்றம் என்று குற்றங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன என்றால் சரிதான். 304(A) இ.த.ச., ஆய்வாளர் விசாரிக்கும் வரம்பிற்கு உட்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் புலன் விசாரணை எனது அதிகார வரம்பிற்கு மீறி செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் தவறான வாக்குமூலம் பதிவு செய்து, ஆய்வாளர் பார்வைக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.